தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 42 கோடியே 45 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கான 21 விடுதிக் கட்டடங்கள், 16 கோடியே 59 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் 22 கோடியே 97 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி ஜி.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர், த.ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.05.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 54 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், மின் ஆளுமை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் பிரவீன் பி. நாயர், தமிழ்நாடு தொழில்நுட்ப மைய (ITNT) தலைமை நிருவாக அலுவலர் விஜய் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் கொண்டாட முடிவு!

மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் சா.மு.நாசர் தகவல்!

திருவள்ளூர், மே.17-

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாவட்ட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் காக்களூரில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி தலைமை தாங்கினார் ஆதிதிராவிட நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ, மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெராल்டு, சி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதரன், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், எம்.முத்துதமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்றார். இக் கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இதில் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதிச் செயலாளர்கள் சன் பிரகாஷ், புஜ்ஜி. டி.ராமகிருஷ்ணன், டி. தேசிங்கு, ஜி.ஆர்.திருமலை, செ.பிரேம் ஆனந்த், ப.ச.கமலேஷ், தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, என்.இ.கே.மூர்த்தி, தி.வை.ரவி, பேபி சேகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், ஒன்றிய குழு தலைவர்கள் ஜெயசீலி ஜெயபாலன், உ.வடிவேல், க.ஸ்ரீதர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஒ.ஆர்.நாகூர்கணி, ஜி.எஸ்.சங்கீதா சீனிவாசன், ஏ.ஜெ.பவுல், ஏஜி.ரவி, நடுகுத்தகை சுரேஷ்குமார், ஜேக்கப், பிரவின் குமார், வ.ஹரி, வி.ஜெ.உமா மகேஸ்வரி, என்.பி.மாரி முத்து, எம்.மோகன், சௌந்தரராஜன், எஸ்.என்.குமார், கு.தமிழ்செல்வம், எஸ்.சங்கர், கே.ஏ.அபினேஷ், ஜெ.அமிதாப், ஜி.சி.சி.கருணாநிதி, தியாகு, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர பேரூர் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் உடன் இணைந்து திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

திராவிட மாடல் 2 ஆண்டு சாதனையை முன்னிட்டு ஒன்றிய, நகர பேரூர் பகுதிகளில் தலா 2 தெருமுனை பிரச்சார கூட்டம் நடத்திட வேண்டும். அதில் திமுகவின் சாதனைகள் குறித்தும், வருகிற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கான யுகங்கள் குறித்தும் ஆலோசிக்க வேண்டும்.

அதே போல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதி நடைபெறும் பொதுக் கூட்டம் மற்றும் 15ஆம் தேதி நடைபெறும் மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தலைமையில் காணொலிக் காட்சி மூலம் மாவட்ட கழக நடைபெற்ற செயலாளர் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைப்படி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சீரும் சிறப்புமாக கொண்டாடுவதென்றும். கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டு முழுவதும் பிறந்த நாள் விழா கூட்டம் நடத்திட வேண்டும். பிறந்த நாளன்று கழக கொடியேற்றி காது கேளாதோருக்கு உபகரணங்கள், ஏழை எளிய மக்களுக்கு உணவு, இலவச வேட்டி சேலை, மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கிட வேண்டும்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, தலைமை கழகத்தின் மூலம் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் தேதி அன்று, கழகத்திற்கு புதியதாக உறுப்பினர்கள் சேர்த்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது. அந்த வகையில் ஆவடிதொகுதிக்கு இலக்காக 52,800 உறுப்பினர்கள் மற்றும் பூவிருந்தவல்லி தொகுதிக்கு இலக்காக 52,500 உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டது. திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்கள் முன்னிலையில் அனைத்து ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களுக்கு உறுப்பினர்கள் சேர்த்திட வழிமுறைகள் அறிவிக்கப்பட்டு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டது. ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் அவர்கள் பெற்ற விண்ணப்பங்கள் வட்டக்கிளைக்கழகச் செயலர்களுக்கு பிரித்தளித்து பொறுப்பாளர்கள் மேற்பார்வையில் உறுப்பினர் சேர்க்கும் பணி துவங்கப்பட்டது. தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட இலக்கை விட அதிக அளவு உறுப்பினர்கள் சேர்த்த திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் நன்றிகளை மட்டும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வரும் நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் யார் போட்டியிட்டாலும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய பாடுபடுவோம் என இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி தலைமையில் திருவள்ளூர் அடுத்த காக்களூர் ஆர்.எம்.கெஸ்ட் ஹவுசில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் ஆதிதிராவிட நலகுழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெராल்டு, சி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதரன், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், பொதுகுழுஉறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல் வர்ஷன், எம்.முத்துதமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் உள்பட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி தியாகராயர் நகர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை தலைமையில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி முன்னிலையில் 132 வது வட்டத்தில் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், கழக பேச்சாளர் ஆவடி பாஸ்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியில் எஸ்.மோகன், வட்ட கழக செயலாளர்கள் ந.மோ. முரளி, தர்ஷன், அரிகரன், பி.ஜெயக்குமார், பி.மாரி, வெல்டிங் ராஜா, மு.சத்யா, ராஜா அன்பழகன், எம்.ராமகிருஷ்ணன் பாபா சுரேஷ். கா.சந்துரு மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ . - கூ.பீ.ஜெயின் முன்னிலை! ஆர்.தீனதயாளன் தலைமை!

வில்லிவாக்கம் மேற்கு 94 (அ) வட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

சென்னை, மே.17-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி, 94 (அ) வட்டச் செயல்வீரர் கூட்டம் இன்று (17.5.2023 புதன்கிழமை) மாலை 6.30 மணியளவில் மண்டலக்குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின் அலுவலகத்தின் மேல்மாடியில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டச் செயலாளர் ஆலோசனை கூட்டத்தில் கூறியபடி புதிய உறுப்பினர் சேர்த்தல், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்தும் இக் கூட்டத்தில் இந்து சமய அற நிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

வில்லிவாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் அ. வெற்றி அழகன், வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளரும், 8 வது மண்டலக்குழுத் தலைவருமான கூ.பீ. ஜெயின் முன்னிலை வகிக்கிறார்கள்.

வட்டச் செயலாளர் ஆ.தீனதயாளன் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் சாவித்திரி வீரராகவன், மாமன்ற உறுப்பினர் டி.வி.செம்மொழி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், ஜெ. பாலமுருகன், மாநில நிர்வாகி ஆர்.வரதன், பகுதி கழக நிர்வாகிகள் ஜெ.எஸ். பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, கலைச் செல்வி மனோகரன், ஐ.சி. எப்.மு.சுரேஷ்பாபு, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர். கோபாலகிருஷ்ணன், சிட்கோ பி.சுரேஷ்பாபு, அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பி.கோபிலதா, தே.ச.சுந்தர், சிட்கோ எஸ். அன்வர்தீன், வழக்கறிஞர் மா.முரளிவினோத், வழக்கறிஞர் என்.விஜயகுமார், வழக்கறிஞர் எஸ்.சாந்தனு, டைலர் ரமேஷ் டாக்டர் எம்.ஜே.திவ்யானந்த், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ஜி.ஜெ.பிரபு, எஸ்.எஸ். மணிகண்டன், அனுசுயா பாண்டுரங்கன், மு.கிருஷ்ண வேணி, வெ. ராஜேஷ், எஸ்.வெற்றிவேல், ச.காளிதாசன், சண்.இரவி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் ந.வேணு, பி.வேணு கோபால், எ.இ.மணிமாறன், ஆர்.நித்தியானந்தி, அ.குபேரன், மு.சரவணன், ஆ.புஷ்பராஜ், ரா.கணேஷ்குமார், பி.சுப்பிரமணி, ரா.தட்சிணாமூர்த்தி, அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் வட்டச் செயலாளர் ஆர்.தீனதயாளன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அம்பத்தூர் வடக்குப் பகுதியில்

வட்டவாரியாக பாகநிலை முகவர்கள் - பகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, மே.17-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி வட்ட வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA2) மற்றும் பகுதி நிர்வாகளின் ஆலோசனைக் கூட்டம் இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, இந்து சமய அறநிலையத் துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபுவின் ஆலோசனைப்படி அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில் வார்டு 79, 79அ, 80, 81, 85, 86 ஆகிய வட்டங்களில் பாகநிலை முகவர்களின் (BLA2) மற்றும் பகுதி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் கீழ்கண்ட இடங்களில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் பகுதி மற்றும் வட்ட நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகநிலை முகவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறும் விவரம் வருமாறு:-

17.05.2023 - வார்டு 86 - எஸ்.எஸ். மினி மஹால் சிவானந்த நகர் - புதன்கிழமை மாலை 5.00 மணி

17.05.2023 - வார்டு 85 - எஸ்.எஸ். மினி மஹால் சிவானந்த நகர் - புதன்கிழமை மாலை 5.30 மணி

17.05.2023 - வார்டு 80 - இ.ஜெ.பி.மஹால், புதூர் - புதன்கிழமை மாலை 6.00 மணி

18.05.2023 - வார்டு 79 - மஹாலட்சுமி கல்யாண மண்டபம் ராம் நகர் - வியாழக்கிழமை மாலை 5.00 மணி

18.05.2023 - வார்டு 79அ - மஹாலட்சுமி கல்யாண மண்டபம் ராம் நகர் - வியாழக்கிழமை மாலை 5.30 மணி

18.05.2023 - வார்டு 81 - பென்சன் ஹால் ஓரகடம் ரோடு, வெங்கடாபுரம் - வியாழக்கிழமை மாலை 6.00 மணி

மேற்குறிப்பிட்டுள்ள கூட்டங்களில் சம்பந்தப்பட்ட கழக நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.

துறைமுகம் மேற்குப் பகுதி

59 'அ' வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் வேண்டுகோள்

சென்னை, மே.17-

துறைமுகம் 59 'அ' வட்டக்கழகச் செயலாளர் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின் படி சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 59 'அ' வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம், இன்று (17.5.2023 புதன்கிழமை) மாலை 6.00 மணி அளவில் காந்திநகர் சமுதாய நலக் கூடத்தில் நடைபெறவிருக்கிறது.

வட்டக் கழக அவைத் தலைவர் கே.முகமது மாணிக்கம் தலைமையில், பகுதிக் கழக செயலாளர் எஸ். முரளி, 59வது மாமன்ற உறுப்பினர் கே.சரஸ்வதி, பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எம்.வினாயகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக்கழக செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், பாக நிலை உறுப்பினர்கள்,கழகத்தின் மூத்த முன்னோடிகள், அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறுஅன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா! புதிய கழக உறுப்பினர் சேர்த்தல்! வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை ராமாபுரத்தில் நடைபெற்று வரும், தலைவர்களின் சிலை வடிவமைக்கும் பணிகளை நேற்று (16.05.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.